

சிவகங்கையில் நடைபெற்ற சிவகங்கை மாவட்ட கழக செயற்குழுக் கூட்டத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் ஆகியோர் உள்ளார்கள்.



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரிக்கு வருகைதரும், துணை முதல்வரை வரவேற்க விறுவிறுப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. சிங்கம்புணரி, அண்ணா மன்றத்தில் நடைபெற்று வரும் பணிகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆய்வு செய்தார். இதில் சேங்கைமாறன், பூமிநாதன், அம்பலமுத்து, இந்தியன் செந்தில், கதிர்வேல், சிவக்குமார், புகழேந்தி, சிவபுரி சேகர், அலாவுதீன், செல்வகுமார், மணி, பாஸ்கரன், நாராயணன், சரவணன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



மதுரை வடக்கு மாவட்டம் மேலூரில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மேலூர் தொகுதிக்குட்பட்ட சுமார் இருபதாயிரம் பேருக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மேலூர் இளைஞர் அணி அமைப்பாளர், நகரமன்ற உறுப்பினர் ஆர்.ரிஷி ஏற்பாட்டில் அறுசுவை அசைவ விருந்து வழங்கும் விழாவினை துவக்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கரு தியாகராஜன், தொகுதி பொறுப்பாளர் ஆனந்த், மேலூர் நகராட்சி தலைவர் முகமதுயாசின் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க எஸ்.ஐ.ஆர். தேர்தல் பணிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, மாநில உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.ஜெயராம், மாவட்ட நிர்வாகிகள் ஒச்சுபாலு, மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன் ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

# சிங்கம்புணரி அண்ணா மன்றத்தில் கட்டிடப் பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் ஆய்வு!

சிவகங்கை, நவ, 11 -

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் நவ.15ம் தேதி தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். சிங்கம்புணரிக்கு வருகை தரும் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்ளும் அரசு விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்.

சிங்கம்புணரி யில் உள்ள முன்னாள் சட்ட அமைச்சர் செ.மாதவன் நிறுவிய 50 ஆண்டு பொன் விழா கண்ட பாரிவள்ளல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சிங்கம்புணரிக்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை சிறப்பான முறையில் வரவேற்க கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் தலைமையில் ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

15 ஆம் தேதி காலை முதல் நிகழ்ச்சியாக சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி கட்டிடம் திறப்பு மற்றும் சீரணி அரங்கம் கல்வெட்டு திறப்பு, தொடர்ந்து பிரம்மாண்டமான முறையில் புத்தம்புதிதாக இரண்டு அடுக்கு மடியுடன் கட்டப்பட்டு 99 சதவீதங்கள் கட்டிட பணிகள் முடிவுற்று சுத்தம் செய்யும் பணி நடைபெறும் அண்ணா மன்றம்கட்டிடம் திறப்பு,திருநா கோட்டையில் உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ் எஸ் தென்னரசு அவர்களின் திருஉருவ சிலை திறப்பு,என்ஃபீல்டு பகுதியில் அமைந்துள்ள பாரி வள்ளல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் அதன் நிறுவனர் முன்னாள் சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்களின் திருவுருவ சிலை திறப்பு,மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிலையில் அண்ணா மன்றத்தில் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்ய கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் நேரில் வருகை புரிந்து ஆய்வு மேற்கொண்டார்.

அங்கு அமைய உள்ள முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை மற்றும் முன்னாள் சட்ட அமைச்சர் செ.மாதவன் அவர்களின் திருஉருவச் சிலை அமைக்கப்பட உள்ள பகுதி மற்றும் நிறைவு பகுதியில் நடைபெற்று வரும் பணிகளை அமைச்சர் பெரிய கருப்பன் ஆய்வு மேற்கொண்டு ஒரு சில அறிவுரைகளை வழங்கினார்.

தொடர்ந்து 99% முடிவுற்ற நிலையில் எஞ்சிய பணிகளை விரைந்து முடிக்க அமைச்சர் உத்தரவிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் சேங்கைமாறன்,ஒன்றிய செயலாளர் பூமிநாதன், பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, துணைத்தலைவர் இந்தியன் செந்தில், நகர செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், மாவட்ட அயலக அணியின் துணைத் செயலாளர் புகழேந்தி, ஒன்றிய துணை செயலாளர் சிவபுரி சேகர், நகர துணை செயலாளர் அலாவுதீன், மாவட்டப் பிரதிநிதி செல்வகுமார், பிரதிநிதி மணி, ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன், விளையாட்டு மேம்பாட்டு அணி திருப்பத்தூர் நாராயணன், பிரிஞ்சி சரவணன் மற்றும் இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வேல்முருகன் தலைமையில் முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பூபதிமணி முன்னிலையில் முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய பகுதியில் எஸ்.ஐ.ஆர். சம்பந்தமாக பணிகளை ஆய்வு மேற்கொண்டார். உடன் இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சத்தியேந்திரன் இராமநாதபுரம் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சத்தியேந்திரன் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் களப்பணி ரஞ்சித் மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில்

# நாகர்கோவிலில் S.I.R.-ரை எதிர்த்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் கண்டன கோஷங்களை முழங்கினர்!

கன்னியாகுமரி, நவ.12–

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து, வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர சீராய்வு (S.I.R.) ஐ எதிர்த்து கன்னியாகுமரி மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் (11.11.2025 – செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் நாகர்கோவில், மாவட்ட தலைமை தபால் நிலையம் அருகில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

தி.மு.க. நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் வரவேற்புரையாற்றினார். கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து, வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர சீராய்வு (S.I.R.) ஐ எதிர்த்து கண்டன கோஷங்களை முழங்கினார். கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் மரிய சிசு குமார் நன்றியுரையாற்றினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லை செல்வம், நாகர்கோவில் தொகுதி பார்வையாளர் சி.எஸ். ஆனந்த், கன்னியாகுமரி தொகுதி பார்வை யாளர் ˙ரீதர் ரொட்ரிகோ, குளச்சல் தொகுதி பார்வையாளர் மாலை ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஆர்.செல்லசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.வி.பெல்லார்மின், கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் டி.சுபாஷ் சந்திர போஸ், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் எஸ்.வெற்றிவேல், மாநகர செயலாளர் ஆர்.ஜெரோம் ஜெயக்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் சு.கோபி பேரறிவாளன், அல்.காலித், எஸ்.இ. மேசியா, சி.தேவகி, திராவிட கழகம் மாவட்ட தலைவர் எம். எம். சுப்பிரமணியம், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஆர்.சுசீலா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்ட செயலாளர் எஸ்.அப்துல்ரசீத், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் A.மஹீபூப் ஜெய்லானி, தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் மாவட்ட செயலாளர் என்.நவாஸ்கான், ஆதி தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் கே.குமரேசன், மக்கள் நீதி மய்யம் நிர்வாகி கள் A.ஆல்வின், A.சசி ஜெயபிரகாஷ், ஜோசப் றெனி, ஜெ.பெரி இவான்சன், ஆர். மோகன், சபின் ஜெரால்டு, ஆம் ஆத்மி கட்சி மாவட்ட தலைவர் M.R.ஷெல்லி, தமிழக வாழ்வுரிமை கட்சி நிர்வாகிகள் T.தமிழ் செல்வன், பிரனேஷ்குமார், அகில இந்திய பார்வர்டு பிளாக் மாவட்ட செயலாளர் எம்.ஆறுமுகம், திராவிடர் தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் பே.அன்பழ கன், சமத்துவ மக்கள் கழகம் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் உட்பட கன்னியாகுமரி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அனைத்து கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு S.I.R.–க்கு எதிராக கண்டன கோஷங்களை முழக்கமிட்டனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து, வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர சீராய்வு (S.I.R.) ஐ எதிர்த்து கன்னியாகுமரி மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாகர்கோவில், மாவட்ட தலைமை தபால் நிலையம் அருகில் வைத்து மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. தி.மு.க. நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் வரவேற்புரையாற்றினார். கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் மரிய சிசு குமார் நன்றியுரையாற்றினார்.